# இயல் 6.3 - விகிதம்

பயிற்சி எண் :: 6.3.2.2.A

விகித சமம்

## வரையறை

இரு விகிதங்கள் சமமாக இருந்தால் அவை **விகித சமம்** என அழைக்கப்படும். அதனை கீழ்வருமாறு குறிப்பிடலாம்.

a : b : : c : d

இதனை a : b விகித சமம் c : d எனக்கூறுகிறோம்.

## விகித சமன் விதி

இரு விகிதங்கள் விகிதசமத்தில் இருந்தால் அவற்றின் கோடி உறுப்புகளின் பெருக்கற்பலனும் நடு உறுப்புகளின் பெருக்கற்பலனும் சமமாக இருக்கும்.

இதை வேறுவிதமாகவும் கூறலாம். அதாவது, கோடி உறுப்புகளின் பெருக்கற்பலனும் நடு உறுப்புகளின் பெருக்கற்பலனும் சமமாக இருந்தால் அவை விகித சமம் ஆகும்.

a : b : : c : d

$$\frac{a}{b} = \frac{c}{d}$$

$$a \times d = c \times b$$

Sum & solution prepared on Thursday 17th June, 2021 :: 07:33 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.